<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 232/2022

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவலிங்கம் | வயது | : | 38 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராஜலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 16.06.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 2019 ஆம் ஆண்டு விருத்தாசலம் காவல் உட்கோட்டம் ஆலடி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்த போது 07.05.2019ந் தேதி காலை 05.00 மணிக்கு ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.இராதகிருஷ்ணன் அவர்களுடன் நானும் என்னுடன் காவலர் 281 திரு.சதீஷ் ஆகியோர் சகிதம் மணல் கடத்தல் வழக்கு சம்மந்தமாக புலியூர் ஏரியில் கண்காணித்து சென்ற போது ஆலடி காவல் நிலைய எல்லை நடியப்பட்டு ஓடையில் இருந்து புலியூர் ஏரி அருகே வந்த A.K.A.I.V. என்று எழுதப்பட்ட இரட்டை மாட்டு டயர் வண்டியை நிறுத்தி சோதனை செய்ய மேற்படி மாட்டு வண்டியில் சுமார் 1/2 யூனிட் அளவிற்கு ஓடை மணல் இருந்தது.

அதன் ஓட்டுநரை விசாரிக்க தன் பெயர் ஆறுமுகம் S/O கணபதி, ரோட்டுத்தெரு, ஆரியநத்தம், உளுந்தூர்பேட்டை வட்டம் விழுப்புரம் மாவட்டம் என்று கூறினார். மேற்படி ஓடை மணலை நடியப்பட்டு ஓடையில் இருந்து ஏற்றி வருவதாகவும், மேற்படி ஓடை மணலை நிலத்தில் இருந்து எடுப்பதால், நிலத்தடி நீர் ஆதாரம் பாதித்து மக்கள் குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி விற்பனை செய்ய ஏற்றி வந்ததாகவும் மேற்படி ஓடை மணலை ஏற்றிவர எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ எதுவும் வைத்திருக்கவில்லை என்றும், திருட்டுதனமாக ஏற்றி செல்வதாக கூறியவரை காலை 05.30 மணிக்கு காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன் வராததால், தடயங்களை எங்கள் முன்பு கைப்பற்றுதல் மகஜரில் 05.45 மணிக்கு கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1** ஆகும். தற்போது என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் வண்டி தான் கைப்பற்றப்பட்ட வண்டி ஆகும். அது **சா.பொ.1** ஆகும். வழக்கு சொத்து எண் 159/2019. பின்பு எதிரி தடயம் சகிதம் 07.30 மணிக்கு நிலையம் வந்து எதிரியின் மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண் 65/2019 சட்ட பிரிவு 379, 430 IPC r/w 21(1) MM ACT ன் படி வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். என்னுடன் வந்த காவலர் 281 திரு.சதீஷ் என்வரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பமிட்டார். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாகனத்தினை கைப்பற்றி நேரடியாக 07.05.2019 அன்று காலை 7.30 மணிக்கு காவல் நிலையம் வந்து தான் வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரிதான். 5.45 மணிக்கு மகசர் தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் முன்பே மகசரில் குற்ற எண் மற்றும் பிரிவுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றால்சரியல்ல. எத்தனை மணிக்கு வாகனத்தினை கைப்பற்றினோம் என்று குறிப்பிட்டு எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் வாகனத்தினை கைப்பற்றிய இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். மணல் அள்ளியதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகசரில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். மணல் எங்கிருந்து அள்ளப்பட்டது என்பதற்கு வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதுவும் நடக்கவில்லை என்பதும் காவல் நிலைய புள்ளி விவரக்கணக்கிற்கு போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வாகனம் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 232/2022

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதிஷ் | வயது | : | 38 |
| தந்தை/கணவர் பெயர் | : | தர்மலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 16.06.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பெண்ணடம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 2019 ஆம் ஆண்டு விருத்தாசலம் காவல் உட்கோட்டம் ஆலடி காவல் நிலையத்தில்பணிபுரிந்த போது 07.05.2019ந் தேதி காலை 05.00 மணிக்கு ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.இராதகிருஷ்ணன் அவர்களுடன் நானும் என்னுடன் இரண்டாம் நிலை காவலராக சிவலிங்கம் ஆகியோர் சகிதம் மணல் கடத்தல் வழக்கு சம்மந்தமாக புலியூர் ஏரியில் கண்காணித்து சென்ற போது ஆலடி காவல் நிலைய எல்லை நடியப்பட்டு ஓடையில் இருந்து புலியூர் ஏரி அருகே வந்த A.K.A.I.V. என்று எழுதப்பட்ட இரட்டை மாட்டு டயர் வண்டியை நிறுத்தி சோதனை செய்ய மேற்படி மாட்டு வண்டியில் சுமார் 1/2 யூனிட் அளவிற்கு ஓடை மணல் இருந்தது.

அதன் ஓட்டுநரை விசாரிக்க தன் பெயர் ஆறுமுகம் S/O கணபதி, ரோட்டுத்தெரு, ஆரியநத்தம், உளுந்தூர்பேட்டை வட்டம் விழுப்புரம் மாவட்டம் என்று கூறினார். மேற்படி ஓடை மணலை நடியப்பட்டு ஓடையில் இருந்து ஏற்றி வருவதாகவும், மேற்படி ஓடை மணலை நிலத்தில் இருந்து எடுப்பதால், நிலத்தடி நீர் ஆதாரம் பாதித்து மக்கள் குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி விற்பனை செய்ய ஏற்றி வந்ததாகவும் மேற்படி ஓடை மணலை ஏற்றிவர எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ எதுவும் வைத்திருக்கவில்லை என்றும், திருட்டுதனமாக ஏற்றி செல்வதாக கூறியவரை காலை 05.30 மணிக்கு காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன் வராததால், தடயங்களை எங்கள் முன்பு கைப்பற்றுதல் மகஜரில் 05.45 மணிக்கு கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் வண்டி தான் கைப்பற்றப்பட்ட வண்டி ஆகும். வழக்கு சொத்து எண் –159/2019. பின்பு எதிரி தடயம் சகிதம் 07.30 மணிக்கு நிலையம் வந்து எதிரியின் மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண் 65/2019 சட்ட பிரிவு 379, 430 IPC r/w 21(1) MM ACT ன் படி வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

sssssவாகனத்தினை கைப்பற்றி நேரடியாக 07.05.2019 அன்று காலை 7.30 மணிக்கு காவல் நிலையம் வந்து தான் வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரிதான். 5.45 மணிக்கு மகசர் தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் முன்பே மகசரில் குற்ற எண் மற்றும் பிரிவுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றால்சரியல்ல. எத்தனை மணிக்கு வாகனத்தினை கைப்பற்றினோம் என்று குறிப்பிட்டு எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் வாகனத்தினை கைப்பற்றிய இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். மணல் அள்ளியதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகசரில் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.மணல் எங்கிருந்து அள்ளப்பட்டது என்பதற்கு வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதுவும் நடக்கவில்லை என்பதும் காவல் நிலைய புள்ளி விவரக்கணக்கிற்கு போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வாகனம் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.